**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

S.T.C. 77 of 2024

DATE : 03.10.2025

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | **கருப்பையா** | Caste | |
| Father/Husband's Name | **ஞானப்பிரகாசம்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of October 2025

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. சாட்சி நீதிமன்றத்திற்கு ஆஜரான காரணத்தினால் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகாததால் இந்த நீதிமன்றம் வழக்கறிஞர் திரு. வெங்கடேஸ்வரன் Amicus Curiae ஆக நியமனம் செய்யப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை : –**

1) நான் கூமாபட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள ஆஜர் எதிரியையும், வழக்கில் உள்ள மற்றொரு எதிரியையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியின் தம்பியின் மனைவியை அவரது வீட்டில் நடைபெற்ற சண்டையின் காரணமாக என்னிடம் வந்து என்னை பேருந்து நிலையத்தில் இறக்கி விடுமாறு கேட்டதற்காக மேற்படி சரஸ்வதி என்பவரை நான் பேருந்து நிலையத்தில் இறக்கி விட்டு வந்தேன். அதிலிருந்து எதிரி குடும்பத்தினர் என் மீது வண்ணம் கொண்டு என்னிடம் அவ்வப்போது வம்படியாக பிரச்சனை செய்து வந்தார்கள். சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நான் வீட்டிலிருந்து வெளியே வந்த பொழுது ஆஜர் எதிரி

என்னை காலை பிடித்து இழுத்து அடித்தார். ஆஜர் எதிரி என்னை பிடித்துக் கொள்ள மற்றொரு எதிரி சூர்யா என்பவர் என்னை எனது இடது கையில் அருவாளை வைத்து தாக்கி இரத்த காயத்தை ஏற்படுத்தினார். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆட்டோ மூலமாக வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை அளித்துவிட்டு மேல் சிகிச்சைக்காக என்னை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். நான் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது போலீசார் என்னை விசாரித்து என்னிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

எட்டையா மற்றும் சரஸ்வதி எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் தம்பி உறவு முறை ஆகும். ராஜேந்திரன், சூரியமுத்து மற்றும் சூர்யா (எ) சரவணன் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவினர்கள் ஆவார்கள். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. புகார் மனுவை நான் தான் எழுதிக் கொடுத்தேனா என்றால் நான் தான் எழுதி கொடுத்தேன். கடந்த 26.09.2020 அன்று இரவு 7 மணிக்கு எதிரிகள் என்னை தாக்கியதாக காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

சரஸ்வதி என்பவரை அழைத்து சென்று வருவது சம்பந்தமாக சுமார் ஆறு மாதங்களாக எங்களது குடும்பத்தாருக்கும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் நானும் எனது மனைவி வேளாங்கண்ணியும் எனது வீட்டின் முன்பு அமர்ந்திருந்தோம் என்றால் சரிதான். அப்பொழுது எதிரி சூரிய முத்து அங்கே வந்தாரா என்றால் வந்தார். வீட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பவரை இடித்துக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரிதான். அதற்கு மறுநாள் தான் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் மறுநாள் நடைபெற்றதாக சொல்லி உள்ள நிலையில் வழக்குச் சம்பவம் நடைபெற்ற தேதி மற்றும் நேரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

பேருந்து நிலையத்தில் சரஸ்வதி என்பவரை அழைத்துக் கொண்டு விடுவது சம்பந்தமாக எனக்கும் எதிரிகளுக்கும் வாய் தகராறு இருந்து வந்தது என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக நாங்கள் வெளியே பார்த்துக் கொள்ளும் பொழுது எங்களுக்கிடையே வாய் தகராறு ஏற்படும் என்றால் சரிதான். நான் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டேனா என்றால் சரிதான். முதல் நாள் நடைபெற்றது மட்டும்தான் சம்பவம் என்றும் மறுநாள் நான் சொல்லி உள்ள வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

முத்து என்னை தாக்கவில்லை என்று சொன்னால் சரிதான். உட்கார்ந்திருக்கும் என்னை வந்து இடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சூரியமுத்து மற்றும் ராஜேந்திரன் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல மூன்று நபர்கள் தாக்கியிருந்தால் எனக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதை போல சூரிய முத்து மற்றும் ராஜேந்திரன் சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தை யாரெல்லாம் தடுத்தார்கள் என்றால் செல்லக்கனி, முத்தையா ஆகியவர்கள் தடுத்தார்கள். அந்த சமயத்தில் நான் மயங்கி விட்டேன். நான் மயங்கிய நிலையில் இருக்கும் போது என்ன நடந்தது என்ற சம்பவம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சிகள் செல்லக்கனி மற்றும் முத்தையா என்னை எந்த வாகனத்திலும் ஏற்றி விடவில்லை என்று சொன்னால் சரிதான். எனது மருமகன் சடை பாண்டி தான் என்னை வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் எனது மருமகன் சடை பாண்டி சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்ற நேரத்தில் இல்லாத எனது மருமகன் அதன்பின்பு வருவதற்கான காரணம் என்ன என்றால் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவமனை செல்வதற்காக பேருந்து நிலையத்திற்கு வந்த பொழுது எனது மருமகன் எதிரே வந்து நடந்த சம்பவம் குறித்து கேட்டு தெரிந்து கொண்டு என்னை வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

நான் சொல்வது போல சம்பவம் நடைபெற்றிருந்தால் சம்பவ இடத்தில் இருந்த எனது மனைவியோ அல்லது மற்ற சாட்சிகளோ ஏதேனும் வாகனத்தில் ஏற்றி கூமாபட்டி மருத்துவமனைக்கோ அல்லது வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்குகோ அனுப்பி வைத்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்து வரும் முன் விரோதத்தின் காரணமாக முதல் நாள் மற்றும் மறுநாள் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக பொய்யாக நான் புகார் மனு கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வயோதிகம் காரணமாகவும், சர்க்கரை நோய் பிரச்சினை காரணமாகவும் திடீரென்று மயக்கம் ஏற்பட்டு கீழே விழ வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. தன்னிச்சையாக கீழே விழுந்ததில் எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்துக் கொண்டுதான் எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கில் இருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு